452 52

காசி மா நகரம்



Q23:38.252K.
N48
56323

படங்களுடன்கூடியது

காசி மா நகரம்

(ஆரம்ப வகுப்புக்களின் பரந்த படிப்பிற்குரியது)

மொழி பெயர்ப்பு

ஆங்கிலத்தில் ஆக்கியவர்,
C. A. பார்க்கர்ஸ்டு.

மாக்மில்லன் அண்டு கம்பெனி லிமிடெட்
மதராஸ் பம்பாய் கல்கத்தா லண்டன்
1948

பதிப்புரிமை

முதல் பதிப்பு

1948.

The Jupiter Press Ltd. Madras.

காசி மா நகரம்

I

காசி ஐக்கிய மாகாணத்தில் உள்ளது; அம் மாகாணம் ஆக்கிராவையும் அயோத்தியையும் கொண்டது. காசி நகரம் கங்கை நதிக்கரையில் அமைந்திருக்கிறது. அது பல ஆயிர ஆண்டுகளுக்குமுன் தோன்றியது; அதனுல் அது இந்திய நகரங்களில் மிகவும் புராதனமானது. அது இந்துமதச் சிறப்பு வாய்ந்தது; இந்

துக்களுக்கு உலகத்திலேயே மிகவும் புண்ணியமான இடம் காசியே. புராதன இந்து சாஸ்திரங்களிலே அதற்கு 'வாரணசி' என்று பெயர்; அங்கே பல அரச வமிசங்கள்

தோன்றி மறைந்துள்ளன. காசி குருமார்கள் பண்டைக் காலந்தொட்டே வேதங்களையும், புராணங்களையும் படித்துப் பாண்டித்தியம் பெற்றவர்கள். சிவபெருமான் வாரணாசியில் கோயில் கொண்டிருக்கிறார்; அதனால்தான் இந்நகரம் புண்ணிய இடமாயிற்று. சுவாமி யின் பெயர் விசுவநாதர்; அம்மன் பெயர் விசாலாக்ஷி. காசியில் பற்பல கோயில்கள் இருக்கின்றன.

இந்து மதம் சார்ந்த வயதான பல ஆண் களும் பெண்களும் காசியை அடைந்து அங் கேயே வசித்து வருவர். காசியில் இறந்தால் முத்தியடைவது நிச்சயம் என்று அவர்கள் நம்புகின்றனர். 'காசியில் இறக்க முத்தி' என்ற பழ மொழியைக் கவனிக்க!

'புண்ணிய நதியாகும் கங்கையில் மூழ்கு வது மோக்ஷம் அடைவதற்கு முக்கியமாகும்' என்பது இந்துக்களின் நம்பிக்கை. அந்தப் புண்ணிய தீர்த்தத்தில் ஆயிரக் கணக்கான யாத்திரீகர் மூழ்குவர்; பிறகு கோயில்களில் தரிசனம் செய்வர்; ஆங்காங்கே உள்ள சாதுக்களுக்கும், பிச்சைக்காரர்களுக்கும் தானம் கொடுப்பர்; அப்பால் மன நிம்மதியுடன் இருப்பிடம் செல்வர். இப்பொழுது, மூழ்கும் இடங்களுக்குப் போய் அங்குள்ள ஜனங்களைக் கவனிப்போம்.



யாத்திரீகர்கள் எங்கெங்கே யிருந்து வருகின்றனர்? குமரிமுனை, மதுரை, திருச்சிராப்பள்ளி முதலிய இடங்களிலிருந்து சென்னை மாகாணத்தார்; பம்பாய், பூனா, நாசிகம் என்ற இடங்களிலிருந்து மராத்தியர்; கயா, பாடலிபுத்திரம், இவைகளிலிருந்து பீகாரியர்; கல்கத்தாவிலிருந்து வங்காளியர்; பூரியிலிருந்து ஒரியர்; கட்மண்டுவிலிருந்து நேபாளியர்; பஞ்சாபு, காஷ்மீரம் இவற்றிலுள்ள இந்துக்கள்; இவ்வண்ணம் இந்துஸ்தானத்தின் நான்கு மூலைகளிலிருந்தும் யாவரும் ஒரே நோக்கத்துடன் வந்து சேருகின்றனர். அவர்களுடைய நோக்கம் கடவுளை வழிபடுவதும் கங்கையில் மூழ்குவதுமேயாகும்.

II

வீதிகளிலும், கடைவீதிகளிலும் ஒரே கூட்டம்! ஆற்றங்கரையில் அதைவிடக் கூட்டம். ஒரு ஸ்நானக் கட்டத்தில் ஒரு கலியாண ஊர்வலம் வந்து சேருகிறது; வாத்தியம் முழங்க விருந்தினர் மகிழ்ச்சியுடனும் குதூகலத்துடனும் காணப்படுகின்றனர். இன்னொரு ஸ்நானக் கட்டத்தில் பிண ஊர்வலம் வருகிறது; துயரம் அடைந்தோரின் அழுகுரல் ஓங்கி நிற்கிறது.

அதோ! சிறு பிள்ளைகள் சிலர் வருவார் போவாரிடம் பிச்சைகேட்கின்றனர். திருநீறு தரித்து உடலில் அற்ப ஆடை அணிந்த சாதுக் கூட்டத்தினர் யாசிக்கின்றனர். ரிஷபங்கள் எதையேனும் தின்பதற்கு நம்மைத் தள்ளிக்கொண்டு போகின்றன; ஒவ்வொரு சமயம் அவற்றில் ஒன்று யாத்திரீகன் கழுத்திலுள்ள மாலையைக் கூடக் கடித்து இழுக்கும்.

கூட்டம் நிறைந்த தெருக்களைச் சிறிது நேரம் விட்டு அப்பால் போவோம்; ஆற்றில் சிறிது தூரம் போய் வருவோம். கருங்கல் படிகளில் கீழே இறங்கிப் போய் ஒரு நாட்டுப்

படகில் ஏறு கிறோம். படகில் கட்டப் பட்டுள்ள சிறு அறையின் மேல் தளத்தில் உட்காருகிறோம். படகோட்டிகள் படகை நடு ஆற்றிற்குத் தள்ளுகின்றனர்.

III

ஆற்றில் கொஞ்சம் போனேமோ இல்லேயோ அருமையான காட்சி தோன்றுகிறது. ஆற்றங் கரையோரத்தில் அரண்மனைகளும், கோயில்களும், வீடுகளும் வரிசையாய்க் காண்கின்றன. பல மேல்மண்டபங்களும், ஸ்தூபிகளும் தங்க முலாம் கொடுக்கப்பட்டுள்ளன ; ஆதலால் அவை சூரிய ஒளியில் தகதக என்று மின்னுகின்றன. ஆகாயத்தில் யாவற்றையும் விட ஓங்கி எழுந்து நிற்பவை அவுரங்கசீப்பு மசூதியின் கட்டைக் கோபுரங்களே ; இந்த மசூதி பதினேழாம் நூற்ருண்டில் கட்டப்பட்டது.

யாத்திரீகர்களில் பெரும்பாலோர் பித்தளைப் பாத்திரங்களை எடுத்து வருகின்றனர். அவை எதற்காக? கங்கா தீர்த்தம் கொண்டு போகத்தான்.

ஸ்நானக் கட்டங்களின் படிகளில் பனை ஓலைக் குடைகள் காண்கின்றன; அவற்றின் கீழ் பிராமணர்கள் சிலர் உட்கார்ந்திருக்கின்றனர்; அவர்கள் தம்மிடம் வருவோரை ஆசிர்வதித்து அனுப்புவர். க்ஷவரம் செய்துகொள்ள வருவோரை எதிர்பார்த்து சில நாவிதர்களும் ஒரு புறத்தில் காத்திருக்கின்றனர்.

'யால்சைன்', 'மணிகர்ணிகா' கட்டங்களுக்கு அருகில் பாருங்கள்! கட்டை அடுக்குகளிலிருந்து புகை

56323
Q23:38.252'1c
N48

கிளம்புகிறது. இவை மயானங்கள்! இங்கே பிணங்கள் சுடப்படும். பிணம் வெந்ததும், உறவினர் எலும்பு சாம்பல்களை அள்ளிக் கங்கையிற் கொட்டிவிட்டு மூழ்கிச்செல்வர்.

பொன் கோயில், ஆஞ்சநேயர் கோயில் முதலிய கோயில்களில் யாத்திரீகர் நிறைந்திருப் பர். பொன் கோயில் 'தசாசுவமேத' கட்டத் திற்கு அருகில் இருக்கிறது. அது மிகப் பெரிய தல்ல; ஆனால் அதன் அமைப்பு தனிச்சிறப்பு உடையது. மேல் மண்டபங்கள் தங்க முலாம் பூசிய செப்புத் தகட்டால் ஆனவை. கோயிலுக் குள் கண்கொள்ளாக் காட்சி! யாத்திரீகர் கூட்



டங்கள் வருவதும் போவதுமாய் இருக்கின்றன. பூ மணமும் தூப மணமும் 'கம்' என்று வீசுகின்றன! வேத கீத ஒலி எங்கும் கேட்கிறது. தூரத்தில் உள்ள கோயில்களில் விளக்குகள்



மின்னுகின்றன; மணி யோசையும் காற்றில் மிதந்து வருகிறது. பொன் கோயிலை விட்டு வெளியே வரும்பொழுது தெய்வ பக்தி தோய்ந்திருந்த ஒரு இடத்தைவிட்டு வருகிறோம் என்ற எண்ணம் நமக்குத் தோன்றுகிறது.

பொன் கோயிலுக்கு அருகில் 'ஞானக் கிணறு' காணப்படுகிறது. இந்தக்கிணறு புனிதமானது; முன் ஒரு சமயம் காசி விசுவநாதரின் விக்கிரகம் அந்தக் கிணற்றிற்குள் போடப்பட்டதாம். விக்கிரகம் இன்னும் கிணற்றில்தான் கிடக்கிறது. இந்துக்கள் இந்தக் கிணற்று

நீரைப் புண்ணிய தீர்த்த மாய்க் கொண்டாடுகின்றனர். ஒரு பிராமணர் கிணற்றின் அருகில் நாள் முழுதும் உட்கார்ந்திருக்கிறார். அவர் கிணற்று தீர்த்தத்திற் சில துளிகளை யாத்திரீகருக்கு அளிக்கின்றார்; யாத்திரீகர் அந்தத் தீர்த்தத்தைப் பயபக்தியுடன் குடிப்பர். பல யாத்திரீகர் அந்த ஜலத்தைப் பித்தளைப் பாத்திரங்களில் எடுத்துச் செல்கின்றனர். அவர்கள் ஊருக்குத் திரும்பியதும் அங்குள்ள ஜனங்கள் அந்தத் தீர்த்தத்தை மிகுந்த பக்தியுடன் வாங்கிக்கொள்வர். திரும்பிச் செல்வோரில் பலர் ரெயில் வழியாய்ப் போவர்; சிலர் பழைய கட்டை வண்டிகளில் போவர்.

IV

காசி இந்து பல்கலைக் கழகம் இந் நகரத்திலிருந்து நான்கு மைல் தூரத்தில் உள்ளது. அதற்குக் கோடி ரூபாய் செலவாகி யிருக்கிறது. தேசத்திலுள்ள இந்து அரசர்கள் அதை நடத்துவதற்குப் பண உதவி செய்துள்ளனர். பல்கலைக் கழகத்தில் படிக்கும் மாணவர் இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் வந்தவர்.

காசி மகாராஜாவுக்கு ஒரு அரண்மனை உண்டு; நதியின் அக்கரையிலுள்ள 'இராமநகரி'ல் ஒரு கோட்டையும் உண்டு. கோட்டையில் பண்டைக் காலத்து வாள் முதலிய ஆயுதங்கள் அருமையாய்ச் சேகரித்து வைக்கப்பட்டுள்ளன.

காசி பித்தளைப் பாத்திரங்களுக்கும், நேர்த்தியான புடவைகளுக்கும், பூ வேலையுள்ள பட்டு முதலிய துணிகளுக்கும் பேர்போனது. காசியில் இருக்கும்பொழுதே நாம் 'சாரநாத்'தையும் பார்த்து விடவேண்டும். சாரநாத் 'கௌதம புத்த'ரால் புகழ்பெற்றது.

V

கௌதம புத்தர் 'சாக்கிய' வமிசத்து அரச குமாரர். அவர் சகல சுக போகங்களில் வளர்க்கப்பட்டார்; ஆனாலும் நோய் அடைந்தோரையும் இறந்தோரையும் காணும் பொழுது அவருடைய இதயம் கசியும். அவர் தன் சுக போக வாழ்க்கையை உதறித் தள்ளத் தீர்மானித்தார். மனைவியையும், மகனையும் விட்டுப் பிரிந்தார்; தவம் செய்ய காட்டில் சென்றார். கடைசியில்

கௌதமர் தான் நாடிய ஞான நிலையை அடைந்தார்; 'புத்தன்' அல்லது 'ஞானச் சுடரோன்' நிலைமையை அடைந்தார். சாரநாத்தில்தான் கி.மு. 600-ம் ஆண்டில் கௌதம புத்தர் தனது புதிய கொள்கையை உபதேசித்தார். அவர் உபதேசத்தைக் கேட்க ஜனங்கள் திரள் திரளாய் வந்தனர்; அவர் கற்பித்த உண்மைகளை அறிந்து கொள்ள முயன்றனர். அவரைப் பின்பற்றியவர்களுக்குப் 'பௌத்தர்' என்று பெயர்.

புத்தர் எந்த இடத்தில் உபதேசித்தாரோ அதே இடத்தில்தான் பழைய காலத்திய 'ஸ்தூபி' கட்டப்பட்டிருக்கிறதாம். அதற்கு அருகாமையில் கிடைத்த புத்தச் சின்னங்கள் ஒரு கண் காட்சிச் சாலையில் வைக்கப்பட்டுள்



ளன. நாம் ஆராய்ந்து அறியக்கூடிய பாழான இடங்கள் பல உள்ளன.

காசியைச் சுற்றிப் பார்ப்பதில் நாம் அவசரப்படக்கூடாது; நிதானமாய்ப் போகவேண்டும். பார்ப்பதற்குப் பல இருக்கின்றன; யாவற்றையும் பார்த்தபிறகும், இன்னொருமுறை வந்து

பார்க்கமாட்டோமா என்றே எண்ணுவோம். நம்மிடத்து ஊன்றிய காசியின் கவர்ச்சி அவ்வளவு மகிமை வாய்ந்தது!

பயிற்சிகள்

1. காசி இருப்பது எங்கே?

2. அது எவைக்குப் பேர்போனது?

3. அதன் மறு பெயர்கள் யாவை?

4. இந்தியாவின் முக்கிய மதங்கள் எவை?

5. இந்தியாவில் யாத்திரீகர் போகக்கூடியதும் உனக்குத் தெரிந்ததுமான பிற ஊர்களின் பெயரைக் குறிக்க.

6. காசி ஸ்நானக் கட்டங்களைச் சுருக்கமாய் வர்ணி.

7. கௌதம புத்தரின் வரலாற்றைச் சுருக்கி எழுதுக.

8. ஒரு கோயிலின் படம் வரைக.

9. இந்தியாவின் படம் வரைந்து அதில், 4-ம் பக்கத்திற் காட்டிய பட்டணங்களைக் குறிக்க.

மாக்மில்லன் அண்டு கம்பெனியாரின்
புதிய தமிழ் வெளியீடுகள்

1. கடல் அடுத்த
சென்னை நகரம் விலை அணா 3
2. தமிழ் நாடு விலை அணா 5½

ஆங்கிலத்திலிருந்து மொழி
பெயர்க்கப்பட்டவை

Benares, The Holy City—As. 3